AN OPEN CLINICAL STUDY ON "*PAANDU NOI*" (IRON DEFICIENCY ANAEMIA) IN CHILDREN WITH THE EVALUATION OF SIDDHA TRIAL DRUG *KARISALANKANNI CHOORANAM*

The Dissertation Submitted By

Reg. no.321614103

Under the Guidance of

Dr. C.SHANMUGAPRIYA. M.D(S)

Dissertation submitted to

THE TAMILNADU Dr. M. G. R MEDICAL UNIVERSITY

Chennai – 600032

In partial fulfilment of the requirements for the award of the degree of

DOCTOR OF MEDICINE (SIDDHA)

(BRANCH – IV *KUZHANTHAI MARUTHUVAM*)

POST GRADUATE DEPARTMENT OF *KUZHANTHAI MARUTHUVAM*

Government Siddha Medical College,

Chennai – 600106

October – 2019

CERTIFICATE

This is to certify that the dissertation entitled **"AN OPEN CLINICAL STUDY ON PAANDU NOI" (IRON DEFICIENCY ANEMIA)** is a bonafide work done by **Dr. K. Karpagavalli**, Government Siddha Medical College, Chennai – 600 106 in partial fulfillment of the University rules and regulations for award of **SIDDHA MARUTHUVA PERARIGNAR** under my guidance and supervision during the academic year 2016 – 2019.

Name & Signature of the Guide

Name & Signature of the Head of Department

Name & Signature of the Dean/ Principal

ACKNOWLEDGEMENT

My humble thanks to the Almighty God, for giving me the opportunity to do this dissertation. I also express my thanks to Siddhars, who blessed and guided me in all my efforts, to complete this dissertation.

I express my sincere thanks to respected Principal **Prof. Dr.R. Meenakumari, M.D(s)**, Government Siddha Medical College, Chennai – 106.

I express my sense of gratitude to the respected Guide **Dr. C. SHANMUGAPRIYA M.D(s)**, Lecturer II, Post Graduate, Department of Kuzhanthai Maruthuvam, Government Siddha Medical College,Chennai-106, for granting permission to undertake a study in the dissertation topic and providing all basic facilities in this dissertation topic and the moral support, valuable guidance and encouragement to finish this dissertation work.

I express my sincere thanks to **Dr.V. RANI. M.D(s)**, Head of the Department, Government Siddha Medical College, Chennai-106 for her guidance and moral support.

I wish to thank **Dr. N. Manju Hemamalini M.D(s)**, Government Siddha Medical College, Chennai,-106 for her useful support during this study.

I wish to thank **Mr.S.Selvaraj**, M.sc Biochemistry, Government Siddha Medical College, Chennai-106 for his guidance and helping me to do the biochemical analysis of trial drug during study.

I wish to thank **Dr. P. Muralidharan, M.Pharm, PhD**, C.L.Baid metha college of pharmacy, Thoraipakkam, Chennai – 97, for giving IAEC approval and helping me to finish toxicity study and activity study.

I wish to thank **Dr. S. Sankaranarayanan M.Sc., M.Phil., Ph.D.**, GSMC, Chennai – 106, for his guidance giving drug authentication.

I wish to thank **NOBLE RESEARCH SOLUTIONS** for helping me to do the phytochemical and physico chemical analysis.

I wish to thank **Dr.S.Sathya Rajeshwaran, M.D(s)**, SCRI, Chennai – 106, for his guidance and helping me to complete IEC, valuable guidance and encouragement to finish this dissertation work.

I thank Librarian **Mr.V.Dhandayuthapani**, **M.Com, M.L** is, Dr.Ambedkar Library, GSMC, Chennai-106.

I wish to thank **Dr. K. Hina firdouse B.S.M.S** and **Dr. Yogapriya B.S.M.S., M.sc Epidemiology** for helping to do Bio-stastical analysis.

I wish to thank **Dr. G. G. Kalaiselvi M.D(s)** my senior, who helped a lot during my project.

I express my sincere thanks to all other Teaching Staffs in Government SiddhaMedical College, Chennai– 106.

I express my gratitude to all my patients and their parents, for their willingly accepting themselves for this study.

My special thanks goes to my family members, batchmates and beloved friends, juniors and seniors, for their encouragement and support in completing the dissertation.

CONTENTS

INTRODUCTION

Siddha system is said to be one among the Indian system of medicines, i.e., it is one in the AYUSH group.Siddhars are those who lived and maintained their body as they desired best. They were the devotees of Lord Siva and rejected everthing else in Tamil Saiva system which was inconsistent with pure theism.

There are various principles present in Siddha system said by different Siddhars. The major and common concept of Siddha deals with Five Boodhas and Three Humours, respectively Prithivi, Appu, Theyu, Vaayu, Aagayam along with Vatham, Pitham and Kapham.

"நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்".

- தொல்காப்பியம்

The physiology, pathology, diagnosis and treatment in siddha is based on the above said three humours. When these Humours in the human body get affected, it is said to be Dhosha or kutram. The fluctuations of these humours leads to disease, the repair of these kutrams is the treatment procedure in Siddha.

" வாதமாய்ப்படைத்துப்பித்த
வன்னியாய்க்காத்துச்சேத்ப
சீதமாய்த்துடைத்துப்பாராந்
தெகத்திற்குடியாமைந்து".

- நோய் நாடல் நோய்முதல் நாடல் 2

Our Siddhars, not only concentrated on the diagnosis and treatment, they have followed and given a various principles to lead a healthy and hygienic life. Siddha is built by vast number of Siddhars, such as Navanadha siddhar, padhinen siddhar, navakodi siddhar, nava siddhar. In this, padhinen siddhargal plays a major role in the Siddha system.

Agathiyar is said to be the first siddhar in padhinen sidhargal. He have described that there are 4448 diseases in his book Agathiyar rathna churukka naadi. It includes 62 types of diseases and its classifications. According to this, Paandu noi is classified into 10 types.

Paandu noi symptoms are more or less equivalent to Iron deficiency anaemia. Iron Deficiency Anaemia (IDA) is a very common disease prevalent in the society.

Long term oral iron therapy is commonly used as first line therapy but iron salts such as ferrous sulphate are associated with a high incidence of gastrointestinal side effects such as nausea, vomiting, diarrhoea or constipation. Because of their adverse effects, a safe, effective, cheap, and easily available drug is needed. Many drugs are available in Siddha system of medicine which have remarkable effects in treating anaemia. One such medicine is Karisalankanni chooranam is indicated for anaemia mentioned in Siddha classical literature.

With the aim of that, this Poly Herbal preparation may be effective to manage childhood IDA without any synergistic effects. The present study was carried out to study the efficacy and safety of the Siddha poly herbal compound drug karisalankanni chooranam with the application of modern parameters.

AIM AND OBJECTIVE

AIM:

Paandu noi is an important haematological entity described in siddha literatures. It is essential to find out a simple drug to overcome this disease. The drug should be easily available, economic, easily, administered and also effective in smaller doses. Karisalankanni chooranam possess all the above characters. This is the reason for selecting this drug.

OBJECTIVES

1. To collect the literature of both siddha and modern aspects of the disease paandu noi.
2. To have an idea about the prevalence of paandu noi with reference to age, sex, socio-economic status, poverty, seasonal variations etc.
3. To know the aetiology, classification, symptoms, diagnostic methods and line of treatment compared with Iron deficiency anaemia.
4. To know the alteration of the disease under the topics mukkutram, udal kattukal, poripulangal, envagai thervukal, neerkuri, neikuri.
5. To make a clinical trial on patients with the trial medicine karisalankanni chooranam in the treatment of paandu noi.
6. To make use of modern parameters in the investigation side to confirm the diagnosis and to follow the progress of the patients.
7. To elicit bio-chemical analysis, toxicological analysis and pharmacological action of the trial medicine.
8. To make an awareness among the parents about the prevention of disease in children.

REVIEW OF LITERATURE

SIDDHA ASPECT

வேறுபெயர்:

வெண்மைநோய், வெளுப்பு நோய், வெண்பாண்டம்.

இயல்பு:

இயற்கை நிறமாறி, உடல் வெளுத்து, கண்ணையும் நகக் கண்ணையும் நீக்கிப் பார்க்கின் குருதியின்றி வெளுத்திருக்கும்.

- **நோய் நாடல் நோய்முதல் நாடல் பகுதி 2**

தேகத்தின் இரத்தத்தில் உள்ள சிவந்த அணுக்கள் குறைந்து தேகம் வெளுத்துவிடுவதற்குபாண்டுநோய் என்று பெயர்.

பாண்டுநோய் இரத்தம் கெட்டு பலவாரான நோய் சேர்வதால் உண்டாகிறது.

- **ஆத்மரட்சாமிர்தம்**

நம் நாட்டில் குழந்தைகளிடையே அதிக அளவில் கணப்படும் மிக முக்கிய நோய்களில் ஒன்று வெளுப்பு நோய் ஆகும்.

இந்நோய் ஏழை எளிய குடும்பங்களிலும் சுற்றுப்புறச் சுகாதாரத்தை பேனாத சுழ்நிலையிலும் அதிகம் ஏற்படுகின்றது.

அதிக அளவிலுள்ள இந்நோயைக் கட்டுபடுத்த கருவுற்ற காலத்திலேயே தாய்க்கு போதுமான இரும்புச் சத்துள்ளமருந்துகளை அரசு வழங்கி, குழந்தைகளுக்கு இந்நோய் வராமல் தடுக்கிறது. இருப்பினும் பல்வேறு காரணங்களால் இந்நோய் குழந்தைகளுக்கு எளிதில் ஏற்படுகிறது.

வெளுப்பு நோய் குழந்தைகள் பிறந்தது முதல் குழந்தை பருவம் முழுவதும் தொடர வாய்ப்புண்டு. இந்நோய்க்கு சரியான முறையில் சிகிச்சை அளிக்காத நிலையில், இதனை தொடர்ந்து சோபை, காமாலை, இதயநோய்கள் போன்ற நோய்கள் உண்டாகும்.

நோய் ஏற்பட காரணங்கள்:

- **வெளுப்பு நோய்க்கு மிக முக்கியக் காரணம் குழந்தைப்பருவத்தில் ஏற்படும் ஊட்டச்சத்துக் குறைபாடு ஆகும். இரும்பு சத்துள்ள உணவு வகைகளைத் தவிர்க்கும் நிலையில் நோய் உண்டாகிறது.**

- குருதியின் வலிமையைக் குறைக்க கூடிய உப்பு, புளிப்பு, துவர்ப்பு ஆகிய சுவையுள்ள பொருட்களை மிகுதியாக உண்ணும் போது குடலில் இரும்புச் சத்துஉட்கிரகிக்கப் படுவது குறைகிறது.
- கல், மண், சாம்பல்,திருநீறு, கற்பூரம் போன்ற உண்ணத்தகாத பொருள்களை உண்ணல்(PICA).
- குழந்தை பருவத்தில் அதிகம் உண்டாகும் வாந்தி, கழிச்சல் நோய்களால் உடல் வன்மை குறைந்து பாண்டு நோய் ஏற்படலாம்.
- "குடற்கிருமிகள்" நோய் அனைத்துக் குழந்தைகளிடமும் காணப்படும் பொதுவான ஒரு நோய் ஆகும். இதில் கொக்கிப் புழுவின் (HOOK WORM) தாக்குதலால் வெளுப்பு நோய் உண்டாகிறது.
- குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்களான கணம், அக்கரம், வலிப்பு, தோடம் போன்ற நோய்களுக்கு சரிவர சிகிச்சை அளிக்காத நிலையில் வெளுப்பு நோய் ஏற்படுகிறது.
- பிறவி குறைபாடுகளின் காரணமாக குடலில் உள்ள குடல் உறிஞ்சிகளின் (INTESTINAL VILLI) சரியாக வளர்ச்சி அடையாத நிலையில் உட்கொள்ளும் உணவு உறிஞ்சப்படுவது குறைவதால் இந்நோய் ஏற்படலாம்.
- உடலின் உட்புறம் ஏற்படும் குருதிக் கசிவு (எ.கா.) நிணக்கழிச்சல், இரைப்பைப் புண்.
- இளம் குழந்தைகளுக்கு நீண்ட காலம் பால் மட்டுமே பிரதான உணவாக வழங்கப்படும் நிலையில் ஊட்டச்சத்து குறைபாட்டால் வெளுப்பு நோய் உண்டாகிறது.
- உடலில் அடிப்பட்டு குருதிக்கசிவு அதிகம் ஏற்பட்டால் அதனை தொடர்ந்து பாண்டு நோய் உண்டாகலாம்.
- நாட்பட்ட சுரம், தொற்று நோய்களால் வெளுப்பு நோய் ஏற்படலாம். (எ.கா.) மலேரியா.
- நச்சுத்தன்மையுள்ள மருந்துகளை அளவுக்கு அதிகமாக உட்கொள்ளும் நிலையில் பாண்டு நோய் உண்டாகலாம்.
- நாட்பட்ட கல்லீரல் வீக்கம், மண்ணீரல் வீக்கம் போன்றவற்றை தொடர்ந்து வெளுப்பு நோய் ஏற்படலாம்.

நோய் வரும் வழி

பொதுவாக வளர் இளம் குழந்தைகள் குருதியின் வன்மையைக் குறைக்கக் கூடிய உப்பு புளிப்புள்ள பொருட்களை மிகுதியாகக் கொள்வதாலும், சுரம், பேதி, வாந்தி, கீல்வாயு முதலிய நோய்களுக்குட்படுவதாலும், குருதியை அளவு கடந்து வெளியாக்கும் குருதியழல் நோய், குருதி கழிச்சல், முளைநோய், குருதி வாந்தி முதலியவை எற்படுவதாலும் வெட்டுப்பட்டு மிகுதியாக குருதி வெளிப்படுதலாலும் இந்நோய் உண்டாகும். அன்றியும் நச்சுத்தன்மையுடைய மருந்துகளை நாளளவுக்குமிஞ்சி உண்பதாலும், உடலை இளைக்கச் செய்யும் வயிற்றுபுழுநோய், இளைப்புநோய், நிணக்கழிச்சல் முதலியவைகளாலும் குருதிபெருக்கைக் கெடுக்கக்கூடிய ஈரல்நோய்களாலும், புகையிலை, வெற்றிலைப்பாக்கு, மண், சாம்பல், திருநீறு, கற்பூரம் முதலியவைகளை அடிக்கடி கொள்வதாலும் பாண்டுநோய் வரும்.

- **நோய் நாடி நோய்முதல் நாடல் பகுதி2**

“பிறந்தநாள் பிள்ளைக்குத் தானே நன்றாய்
பிதாவாலே பிணியுடலின் மேலே தோன்றும்”

“வினையது வருகுநேர்மை விபரமா யுரைக்ககேளாய்
அனையது வாகந்தானு மபானனாம் வாயுகூடி
புனையது கிழ்மூலத்திற் புக்கினால் தடிக்கும் தேகம்
கனலதுமெத்தக்காணும் கண்ணது வெளுக்குந்தானே”.

- **பாலவாகடம்**

“கருதிய மீனின் முள்ளும் கலந்துமி நெய்யில் வாலும்
மருவிய எலும்புங் கல்லும் மங்கையர் மருந்தீடும்
பழகிய பழஞ்சோற்றாலும் பழமல நிறைகையாலும்
மருகிய மயிர்களாலும் வந்திடும் நோயதாமே
புறவரை யுண்கையாலும் போக நீருண்கையாலும்
சுரளவே முடக்கிக் கொண்டு முறக்கிடக்கையாலும்
பெருக வெண்டொழியினாலும் பிறக்கநோயென்றே காணே”

- **தேரையர் வாகடம்**

தேரையர் வாகடத்தின் கூற்றுப்படி மீன் முள்ளினாலும், முடி, என்பு, கள், பழையசோறு, மாசுபடிந்த குடிநீர், தவறான முறையில் உறக்கம் கொள்வதாலும் பாண்டுநோய் உண்டாகிறது.

“திருந்திடும் பாண்டுரோகங் சேர்ந்திடுங் குணத்தை கேளாய்
இருத்திடும் வாத பித்தச் சிலேற்பன மிவைதான் மாறும்
பரிந்துதா னொன்றோடொன்று பொருந்துவதாலு மண்ணோடு
அருந்துவதாலும் பாண்டு அணைந்திடு மென்னலாமே
ஆகிய மூலந்தன்னி லணைந்த வுட்டணத்தினாலுந்
தொகையர் மேகந்தாரும் துயர்மிகு சேர்தலாலும்
தேகபோசனையுள்ளார்க்குத் தரித்திரஞ் சேர்தலாலும்
வேகமாந்திரிதோருங்கள் மிஞ்சியே பாண்டுவாமே”

- தன்வந்திரி வைத்தியம்

தன்வந்திரி வைத்தியம் கூற்றுப்படி முக்குற்றங்களின் மாறுபாட்டாலும் மண் முதலியவைகளை உண்பதாலும் பாண்டு நோய் உண்டாகின்றது.

“சொல்லாத கடிவிஷங்கள் குன்மம் பாண்டு
துயர்தீராக் கன்மவினை செய்த பாவம்
எல்லோரும் நகைக்க உடும்பெடுத்த பாவி
இன்னமுண்டு விபரமாய் உலகிற் கேளே.”

- அகத்தியர் பரிபூரணம் 400

அகத்தியர் பரிபூரணம் 400 கூற்றுப்படி பாண்டு கன்மவினையாலும் உண்டாகின்றது.

பரதந்திர காரணங்களினால் பாண்டு உண்டாகும் என சரபேந்திர வைத்திய முறைகள் பாண்டு காமாலை சிகிச்சை நூல் கூறியுள்ளது.

“வயல்தனிலே பூநாக மண்ணைத் தானே
வருந்தியது பொத்து போல வத்தையாகும்
பயில் மொழியீர் தேகத்தில் கிருமிதானே”

- குருநாடி

குருநாடி கூற்றுப்படி கிருமியால் பாண்டு நோய் உண்டாகிறது.

"குறிஞ்சிவரு நிலத்திற் கொற்ற முண்டி ரத்தம்
உறிஞ்சிவரு சுரமுண்டாம் அறிஞருரைக்
கையமே தங்குதரத் தாமை வல்லையுங் கதிக்கும்
ஐயமே தங்கும் அறி".

- பதார்த்த குண் சிந்தாமணி

குறிஞ்சி நிலத்தில் வசிப்பவருக்கு பாண்டு நோய் உண்டாகும் என பதார்த்தகுண சிந்தாமணி கூறுகிறது.

<u>நோய் முற்குறிகள்:</u>

- சிறிது தூரம் நடந்தாலும் மூச்சுவாங்குதல்
- உணவில் விருப்பமின்மை
- வாய் குமட்டல்
- தலைசுற்றல்
- கண் இருளல்
- மார்பு துடித்தல்
- உடல் இளைத்தல்

உடலில் பித்தக்குற்றம் அதிகரித்து குருதியின் நிறத்தையும் எடையையும் கெடுத்து உடலுக்கு வேண்டிய ஊட்டச்சத்தினை அளிக்காமல் உடலை வெளுக்க செய்யும் போது மேற்கண்ட நோய் முற்குறிகள் உண்டாகின்றன.

<u>நோய் பொது குறிகுணங்கள்:</u>

இந்நோயில் உடல் வன்மை நாளுக்கு நாள் குறைந்து நடக்க இயலாமை, தலைநோதல், மயக்கமுண்டாதல், மூச்சுத்தடுமாறல், பசித்தீக்கெடல், உணவு வேண்டாமை, உண்ட சிறு உணவும் வாந்தியாதல் ஆகிய குறிகள் தோன்றும். இன்னும் மிகவும் வெளுத்துத் தோல் சுருங்கல், உடல் மெலிந்து பளபளத்து வெளுப்பாதல், நகக் கணுக்கள் தடித்து வெளுத்தல், நாவெடித்து புண்ணாதல் அல்லது நாவின் மேல்தோலைச் சீவியெடுத்தது போன்று சிவந்து காணுதல் தொண்டைக் கட்டல் என்னும் குறிகளும் காணும்.

- யூகி வைத்திய சிந்தாமணி

“செடமது பித்த நீரால் தெளித்ததால் தேக மெங்கும்
கடமது கனக்க வூதிக் கண்ணுமே வெளுக்குந் தானே
வெளுத்திடு மிரண்டானால் வினையழ சூழக் கேளாய்
களைத்திடு சடலந் தன்னில் கனலதாய் வறட்சி காணும்
பழுத்திடுந் தேக மூதிப் பாண்டு போலாம்”.

- பாலவாகடம்

பாலவாகடத்தின் கூற்றுப்படி கண் வெள்விழி வெளுத்தல், உடல் வறட்சி, உடல் சோர்வு, வீக்கம் உண்டாகும்.

“உற்றதோர் அன்னபேதம் அரோசகம் முதரமந்தம்
முற்றிமார்பு நோய் மூத்திரம் பொன்னின் வன்மை
வெள்ளிசேர் புறங்கால் கைவீக்கமுடல் வெளுத்தல்
வேர்த்தல்பற்றி தொக்கிற்காய் பணித்திய பாண்டுவாமே”

- அகத்தியர் வைத்தியரத்தினச்சுருக்கம்

அகத்தியர் வைத்தியர் ரத்தினச் சுருக்கக் கூற்றுப்படி பசியின்மை, மார்புவலி, சிறுநீர் நிறம் மாற்றம், காணுக்கால் வீக்கம், கண் இரைப்பை வீங்கல், உடல் வெளுத்தல் உண்டாகும்.

சரும வெடிப்பு, அடிக்கடி காறி உமிழ்தல், தேகம் மெலிதல், மண் சாப்பிடுவதில் விருப்பம், கண்களைச் சுற்றிலும் வீக்கம், மலம் மூத்திரம் முதலியவைகள் மஞ்சள் நிறமடைதல், சாப்பாடு நன்றாக செரியாமை முதலான் குறிகள் ஏற்படும்.

- சரபேந்திரர் வைத்திய முறைகள்

“உண்டாகும் வேளைதன்னில் தேகநேர்மை
உறுதியாய்ச் சொல்லுகிறேன் நன்றாய் பாரு
குண்டான முகம் கண்கள் உதடு நாக்கு
குறிப்பான வாய் வேகும் தேக முற்றும்
வேண்டாக வேயுலர்ந்து வெண்மையாகி
விரல் நகங்கள் முழுவதிலும் ரத்தம் வற்றி
கண்டான கால்கள் தான் தணிந்து நிற்கும்
கருவான நாடியது மெதுவாய்ப் போமே

போமேதான் தீபனங்கள் மட்டுப்பட்டு

பொலிவான கண்விழிகள் பெருத்துத் தோன்றும்

ஆமெதான் அசதியு மாயாசங் கண்டு

அவர் நடையும் தள்ர்ந்து பெருமூச்சுக் கண்டு

மூமேதான் மூர்ச்சையுடன் மார்துடித்து

முடிவான கணுக்காலில் வீக்கமுண்டாய்

தூமே தானிருதயத்தின் வதனந் தன்னிற்

துருத்தி நிகர் சத்தமது கேட்கும்பாரே".

- அகத்தியர் குணவாகடம்

அகத்தியர் குணவாகடத்தின் கூற்றுப்படி தோல் வறட்சி, முகம் கண், நாக்கு நகக்கண் வெளுத்தல், உடல்சோர்வு, நாடிநடை குறைவு, பசியின்மை, கண்இரைப்பை வீங்கல், மார்பு படபடப்பு, மூட்டு வீங்கல் உண்டாகும்.

<u>பாண்டு நோயின் வகைகள்:</u>

சித்த மருத்துவ நூல்களின் அடிப்படையில் பாண்டு நோயின் வகைகள் பலவாறாக வகைப்படுத்தப்படுகிறது.

யூகி சிந்தாமணி 800

- வாதப்பாண்டு
- பித்தப்பாண்டு
- கபப்பாண்டு
- முக்குற்றப்பாண்டு
- விடப்பாண்டு
- மண்ணுன் பாண்டு

டி.வி.சாம்பசிவம்பிள்ளை 6

- வாதப்பாண்டு
- பித்தப்பாண்டு
- கபப்பாண்டு
- முக்குற்றப்பாண்டு
- ஊது பாண்டு
- நீர்ப் பாண்டு

மதலை நோய்

- வாதப் பாண்டு
- பித்தப் பாண்டு
- சிலேற்பன பாண்டு
- இரத்தப் பாண்டு
- அசாத்தியப் பாண்டு

ஜீவ ரக்சாமிருதம்

- வாதப் பாண்டு
- பித்தப் பாண்டு
- கபப் பாண்டு
- திரிதோஷப் பாண்டு
- மிருதிகாப்புக்தப் பாண்டு

ரோக நிர்ணய சாரம்

- வாதப் பாண்டு
- பித்தப்பாண்டு
- கபப் பாண்டு
- முக்குற்றப் பாண்டு
- விடப் பாண்டு

வைத்திய சார சங்கிரகம்

- வாதப்பாண்டு
- பித்தப்பாண்டு
- மூலப் பாண்டு
- மூலபித்தப் பாண்டு
- விடப் பாண்டு

அகத்தியர் குணவாகடம்

- வாதப்பாண்டு
- பித்தப்பாண்டு
- கபப் பாண்டு
- முக்குற்றப் பாண்டு
- விடப் பாண்டு

தன்வந்திரி வைத்தியம்

- வாதப்பாண்டு
- பித்தப்பாண்டு
- கபப் பாண்டு
- முக்குற்றப் பாண்டு
- பித்தவாதப் பாண்டு
- சன்னிவாதப் பாண்டு
- பைத்தியப் பாண்டு

பரராசசேகரம்

- வாதப்பாண்டு
- பித்தப்பாண்டு
- கபப் பாண்டு
- சன்னிப் பாண்டு
- மிருதிகாப்புக்தப் பாண்டு

அனுபோக வைத்திய தேவ ரகசியம்

- வாதப்பாண்டு
- பித்தப்பாண்டு
- கபப் பாண்டு
- முக்குற்றப் பாண்டு
- விடப் பாண்டு
- மிருதிகாப் பாண்டு

சிகிச்சரத்ன தீபம்

- வாதப்பாண்டு
- பித்தப்பாண்டு
- சிலேத்துமப் பாண்டு
- திரிதோஷப் பாண்டு
- விஷப் பாண்டு

சரபேந்திர வைத்திய முறைகள் பாண்டு காமாலை சிகிச்சை

- வாதப்பாண்டு
- பித்தப்பாண்டு
- கபப் பாண்டு
- சந்நிபாதப் பாண்டுரோகம்
- மண் தின்றதால் ஏற்பட்ட பாண்டு

பாண்டு நோயின் குறிகுணங்கள்:

சிதம்பர தானுப்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட நூலில் குழந்தைகளில் உண்டாகும் பாண்டு ரோகம் மிகச்சிறப்பாக எடுத்தியம்பப்படுகிறது. அதன் விவரம் வருமாறு,

வாதப் பாண்டு

"வெளுத்துப்போம் வாதமெனும் பாண்டுதானும்
வெளிறியங்கம் பொள்ளலுண்டாய் தமரு வீழும்
கழுத்தின் கீழ் தேய்ந்து கக்கலிருமல் காட்டும்
கண் வெளுத்து கறுப்பாக ரத்தம் வீழும்
பழுத்த பழம்போல் பதுங்கும் உதரம்கண்டாய்
பார்த்திடுகில் பளபளவென மின்னிக் கானும்
செபுத்திடும் சோலைகுயில் மயிலே கேளாய்
சேதங்கள் வாராது திறமாய்ச் செய்யே".

உடல் வெளுத்தல், கண் கருநிறமடைதல், தோல் பளபளப்படைதல் ஆகிய குறிகுணங்கள் வாதப் பாண்டு நோயில் காணப்படும்.

பித்தப் பாண்டு

"தொப்புளும் வயிரும் தள்ளி குடல்தன்னில் ஊற்ற முண்டாய்
தப்பிளை போல் திரண்டு சரீரமும் வெளுப்பே யேறும்
மைப்புறும் குழலினாலே வாயுலர்ந்திருக்கும் கண்டாய்
இப்படி குணங்கள் கண்டால் பித்தபசளை பாண்டே".

பித்தப் பாண்டுவில் வயிறு ஊதல், கொப்புள் வீக்கம், குடல் வீக்கம், தோல் வறட்சி காணும்.

சிலேற்பனப் பாண்டு

"புக்கிடும் சேற்பபாண்டு பொருந்திய குணமே தன்னில்
கக்கிடும் ரெத்தம் போலே கண்வெளுப்பாகும் மேனி
சிக்கிடும் சிறுநீர் பேதி சிறுகவே கெண்டைப் பற்றி
போக்கிடும் தொப்புள்சுற்றி பொருந்திய சுடலைசேரும்".

சிலேற்பனப் பாண்டு நோயில் குருதிவாந்தி, கண் வெள்விழி மற்றும் உடல் வெளுத்தல், சிறுநீர்க்கட்டு, மலக்கட்டு, உந்தியில் நீர் சேர்தல் உண்டாகி மரணம் ஏற்படும்.

<u>ரக்தப் பாண்டு</u>

"சாருமே ரெத்த பாண்டு சரீரத்தை சுருக்கி மேலும்
ஊருமே அங்கமெல்லாம் உணர்ந்திடும் உதரம் விம்மும்
காறுமே மூக்கில் ரெத்தம் கண்மஞ்சள் நிறமே
ஆருமோ அறிந்திடாமல் அய்யேழில் மரணமாமே".

ரக்தப் பாண்டு நோயில் உடல் எடை குறைதல், அரிப்பு, குருதிவாந்தி, கண் மஞ்சள் நிறமாக மாறி 5-7 நாட்களில் மரண்ம் ஏற்படும்.

<u>மண்ணுண் வெளுப்பு நோய்</u>

சிறு குழந்தைகளும் சிறு வயதின்ரும் மண் சாம்பல் செங்கல் திருநீறு கற்பூரம் இவற்றின் மீது தனித்த இச்சைக் கொண்டு அளவு கடந்து உண்பதால் காணும் நோயகும். உட்கொண்ட பொருளுக்கு ஏற்ப வயிறு ஊதல், செரியாமை, வாந்தி, கழிச்சல், சுரம், வயிற்றுப்புழு முதலிய நோய்கள் கண்டு மெலிந்து குருதி வற்றி வெளுத்து வீங்கி மார்பு துடித்தல் முதலிய குறிகுணங்களைக் காட்டும்.

<u>அசாத்திய பாண்டு</u>

"ஆற்மே அசாத்தியபாண்டு அங்கமும் வெளுப்பதாகி
சீறுமே தொண்டைக்குள்ளே சில்லிட்டடைத்தாப் போலே
நாறுமே தேகமெங்கும் நடுக்கிடும் உதரம் வற்றி
பாறுமே பதினேழாம் நாள் பகர்ந்த நல்லிளைப் புண்டாமே

இளைத்திடும் காறுபூறாய் இருமலும் மூச்சும் முட்டி
களைத்திடும் கையும் காலும் கண்ணது மூடிக் கொள்ளும்
தளைத்திடும் பால்ர்க்கும் சதியது வாராதென்று
விளைத்திடும் மயிலே கேளாய்".

அசாத்திய பாண்டு நோயில் உடல் வெளுப்பு, தொண்டைக் குளிரல், உடல் நடுக்கம், கெட்ட நாற்றம், மூச்சு திண்றல் ஏற்பட்டு 17 நாளில் மரணம் ஏற்படும்.

முக்குற்ற வேறுபாடுகள்

முன்பு நோய் வரும் வழியில் கூறியவாறு உடல் வன்மை குறைந்து பசீத்தீ கேடடைந்து உண்ட உணவு சரியாகச் செரியாமற் போகும். உணவு கேட்டால் இரச குருதிகளுக்கு ஊட்டம் பெறாது. தோலுக்கு நிறத்தைக் கொடுக்கும்அழல் மெலிந்து நிறத்திலும் எடையிலும் குறைந்து தீக்குற்றத்தைப் பெருக்கும். அதனளவாக மற்றைய குற்றங்களும் தன்னிலையில் திரிந்து பரவுகாலின் வன்மையைக் கெடுத்து நோயை உண்டாக்கும். நொயின் வன்மை பெருக பெருக ஐயமும் பெருகி வீக்கம் முதலியவைகளையும் துணைகொள்ளச் செய்யும்.

வாதம்

வாதம் வாழுமிடம்:

அபானம், மலம், உந்தியின் கீழ் மூலம், தோல், நரம்புக்கூட்டம், ஊன், பக்குவாசயம், காது.

இயற்கைப்பண்பு:

- ஊக்கமுண்டாதல்
- மூச்சுவிடல் வாங்கல்
- மனமொழி மெய்களுக்குச் செயலைத்தரல்
- மலம் முதலிய பதினாங்கு விரைவுகளை வெளிப்படுத்தல்
- சாரம் முதலிய ஏழு உடற்கட்டுகும் ஒத்த நிகழ்ச்சியைத் தரல்
- ஐம்பொறிகட்கும் வன்மையைக் கொடுத்தல்

வகைகள்-10:

1. பிராணன்

   பாண்டு நோயில் மூச்சுவிட சிரமம் , உணவு செரியாமை ஏற்படும்.

2. அபானன்

   பாண்டு நோயில் உணவின் சாரம் சேரவேண்டிய இடங்களில் சேர்ப்பிக்காது. கழிச்சல் மலக்கட்டு சிறுநீர் குறைவு உண்டாக்கும்.

3. வியானன்

   பாண்டு நோயில் உடல் வீக்கம் கண் உதடு வெளுத்தல் உண்டாகும்.

4. உதானன்

   பாண்டு நொயில் அதிக நீர்வேட்கை உண்டாகும்.

5. **சமானன்**

   பாண்டு நோயில் பசியின்மை ஏற்படும்.

6. **நாகன்**

   இயல்பு.

7. **கூர்மன்**

   இயல்பு.

8. **கிருகரன்**

   பசியின்மை உண்டாகும்.

9. **தேவதத்தன்**

   பாண்டு நோயில் தூக்கமின்மை உண்டாகும்.

10. **தனஞ்செயன்**

    பாண்டு நோயில் பாதிப்படையாது.

<u>பித்தம்</u>

பாண்டு நோய் வர முதல் காரணம் பித்தக் குற்றமாகும்.

பித்தம் வாழுமிடம்

பிங்கலை, பிராணவாயு, நீர்ப்பை, மூலாக்கினி, இருதயம், தலை, கொப்பூழ், உந்தி, இரைப்பை, வியர்வை, நாவிலூறுகின்ற நீர், செந்நீர், சாரம், கண், தோல்.

இயற்கைப் பண்பு

தன் இயற்கை நிலையில் நின்று செரிப்பித்தல், வெம்மை, பார்வை,பசி, நீர்வெட்கை, சுவை, ஒளி, நினைப்பு, அறிவு, வன்மை, மென்மை என்பவை உண்டாக்கி உடற்குத் துணை புரியும்.

பித்தத்தின் தொழில்கள்

- **உடலில் வெப்பமுண்டாதல்**
- **செந்நிற அல்லது மஞ்சள் நிறம் தோன்றல்**
- **உண்ட உணவுப் பொருட்கள் பக்குவடையும் போதும் செரிக்கும் சமயத்திலும் வெப்பமுண்டாதல்**
- **வியர்த்தல்**
- **மயக்கம் ஏற்படல்**
- **செந்நீர் தன் அளவில் மிகுதல் அவ்வாறு மிகுந்த செந்நீர் வெளிப்படுதல்**

- தோல் கண் மலம் சிறுநீர் முதலியன மஞ்சள் நிறமடைதல்
- சீற்றம் வணக்கமின்மை அசைவின்மை நினைவு வெறி மெலிவு எரிவு உண்டாதல்
- எச்சுவையும் கைப்பாகவேனும் புளிப்பாகவேனும் காணுதல் ஆகியவை அழலின் தொழில்களாகும்.

பித்தத்தின் வகைகள்

1. அனற் பித்தம்

   பாண்டு நோயில் பசியின்மை உண்டாகும்

2. இரஞ்சக பித்தம்

   பாண்டு நொயில் கண் வெள்விழி தோல் வெளுத்திருக்கும்

3. சாதக பித்தம்

   அன்றாட பணிகளை சரிவர செய்ய இயலாமல் உடல்சோர்வு உண்டாகும்

4. ஆலோசக பித்தம்

   இயல்பு

5. பிராசக பித்தம்

   பாண்டு நோயில் கண் வெள்விழி, தோல் வெளுத்திருக்கும்.

<u>பாண்டு நோயில் எண்வகைத் தேர்வு</u>

<u>எண்வகைத் தேர்வுகள்</u>

பிணியை அறியும் வழி மருத்துவ நூல் வல்லுநர்களால் எண் வகையாய் வகுக்கப்பட்டுள்ளது.

"நாடிப்பரிசம் நாநிறம் மொழிவிழி
மலம் மூத்திரமிவை மருத்துவராயுதம்"

- நோய் நாடல் நோய்முதல் நாடல்

என்பதனாலும்

"மெய்க்குறி நிறந்தொனி விழிநாவிருமலம் கைக்குறி"

என்னும் தேரையர் வாக்கினாலும் அறியலாம்.

1. **நாடி**

"கொண்டிடவே கயரோகி காச ரோகி
குறிப்பாகச் சிற்றின்பம் செய்த பேர்கள்
அண்டிடவே தரித்திரர்கள் விருத்தர் பாலர்
அன்பாகத் தண்ணீரில் மூழ்கினோர்கள்
கொண்டிடவே இவர்களது உறுப்பின் தாது
கூறவே முடியாது எவர்க்கும்க் கிட்டும்
பண்டிடவே இப்பரீட்சை யார்தான் காண்பார்
பராபரத்தின் மகிமையிது பாரு பாரே".

- **நோய் நாடல் நோய் முதல் நாடல்**

பாலர்களுக்கு நாடி நடையின் உண்மை சரியாகப் புலனாகாவாம். எனவே பாண்டு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நாடிநடை இயன்றவரையில் ஆய்வாளரால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

பாண்டு நோயின் நாடிநடை

பித்த நாடி:

"ஆமேதான் அத்திசுரம் பாண்டு சோகை
ஆழான விடாச்சுரமும் பிரமே கந்தான்
போமேதான் காமாலை பித்த வெட்டை
பொல்லாத பாண்டுடனே சிவந்த நீராம்
தேகமேதான் சிவப்பாயு மஞ்ச ளாயுஞ்
சிறுசிறுத்து இருண்டுவருங் கழிவி ழுந்து
நாமேதான் சோன்னோமே பித்தக் கூறு
நவின்றிட்டார் வாசமுனி நவின்றிட் டாரே"

- **அகத்தியர்**

ஐய நாடி

"சேத்தும நாடி யிளகினால் பாண்டாகும்".

"கானமுள்ள சேத்துமந்தான்னிளகில்.....

.....பாண்டுரோகம்"

ஐயவாத நாடி

"கண்டாயோ சிலேற் பனத்தில் வாதநாடி கலந்திடுகில்

.....பாண்டு....."

"உண்டாயோ சேத்துமத்தில் வாதநாடி

கலந்திடுமேல் பாண்டு பிறக்குந்தானே."

ஐயபித்த நாடி

"இடமான சேத்துமத்திற் பித்தநாடி

எழுந்தணுகில் பாண்டாகும்."

2. **ஸ்பரிசம்**

   தோல் வறட்சி, சொறசொறப்பு காணும்.

3. **நா**

பாண்டு நோயில் நாவெடித்துப் புண்ணாதல், நாவின் மேல் தோலைச் சீவியெடுத்தது போன்று சிவந்து காணும் அல்லது நாக்குப் பட்டுத்துணிபோல் வழுவழுத்து வெளுத்தல், சுவையின்மை உண்டாகும்.

4. **நிறம்**

   உடல், கண் வெள்விழி, நகக்கண் வெளுப்பு உண்டாகும்.

5. **மொழி**

   இயல்பு

6. **விழி**

   பாண்டு நோயில் கண் வெள்விழி வெளுத்திருக்கும்.

7. **மலம்**

   மலக்கட்டு கழிச்சல் ஏற்படும்.

8. **மூத்திரம்**

   பாண்டு நோயில் அடிக்கடி சிறுநீர் இழிதல் உண்டாகும்.

நீர்க்குறி

பாண்டு நோய் உற்பத்தியைக் காட்டும் நீரின் எஞ்சிலக்கணம்

“இயற்கை நீர் சுருங்கினும் இதுவும் சலப் பொருள்

செயற்கை யாயிருந்தினும் சிறுத்து நீரிதுவும்

பாண்டு நோய்ச் சம்பவத்தைத் தருமிதில்

தூண்டுறாப் பேதியும் சோர்வும் பிறக்குமே.”

- நோய்நாடல் நோய்முதனாடல் திரட்டு

ஒரு காரணமுமின்றி இயற்கை அளவுக்குக் குறைந்து இழியும் நீரும்; நீர்ப் பொருள்களை மிகுதியாயுண்ணினும் குறைந்திழியும் நீரும்; பாண்டு நோய் உற்பத்திக்கு வழியாகும். இதனால் நீக்கக்கூடாத பேதியும்.

நெய்க்குறி

“விரைவுடன் கதிர்போல் நீண்டு

வேற்றுமைக் குணங்கள் கண்டால்

குருதிதான் கெட்டு நாசம்

குன்றிய குணம்தென்னே.”

- தேரையர்

பாண்டு நோயில் நெய்க்குறி கதிர் போல பரவும்.

பருவகாலங்கள்

கார் காலம் மற்றும் கூதிர் காலம். இவ்விரு காலங்களில் பித்தம் தன்னிலை வளர்ச்சி மற்றும் வேற்றுநிலை வளர்ச்சி அடையும்.

நிலம்

குறிஞ்சி நெய்தல் மற்றும் பாலை நிலத்தில் வாழும் மக்களுக்கு பாண்டு நோய் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

பாண்டு தீரும் தீராக் குறி

“அசாத்தியமாம் சிலேத்துமமும் தொந்தம் ரெத்தம்

அகலுமே வாதபித்தம் சாத்தியமாகும்.”

- குழந்தை நோய்கள்சிதம்பரதானுபிள்ளை

குழந்தைகளுக்கு உண்டாகும் ஐந்து வகை பாண்டு நோய்களில் வாதப் பாண்டு, பித்தப் பாண்டு இரண்டும் சாத்தியம்.

சிலேத்துமப் பாண்டு, தொந்தப் பாண்டு, ரத்தப் பாண்டு ஆகிய மூன்றும் அசாத்தியம்.

அசாத்திய பாண்டு

பாண்டு ரோகிக்கு வீக்கம், சோம்பல், தாகம், அரோசகம், வாந்தி, விக்கல், இருமல், பேதி என்னும் இக்குணங்கள் உண்டாகி எந்த பொருளைப் பார்த்தாலும் மஞ்சள் நிறமுண்டானால் அசாத்தியம்.

- அகத்தியர் வைத்திய பிள்ளைத்தமிழ்

கண்ணுசாமியம்

"பாண்டு பிரமேகம் பன்வாத சூலை குன்மம்
வேண்டா சயஞ்சன்னி வெண் சோபை- நீண்ட
அதிநீரே காமாலை யானபிணி தம்மு
ளதி சாரமா காதறி

சொல்லு பித்தத்திற் சோபை சோபைதனில் வாயுதொந்தம்
வல்லவதிற் பாண்டுவன் பாண்டில் - நல்ல
வயிற்றுக் கடுப்பு வளர்கடுப்புற் சீதம்
பயிலிற் கெடுதி யெனப்பன்

வெப்புப் பிணியதனில் வெம்மேகத்தால் வருந்தின்
தப்பு மிகை நீரே தானிறங்கின்- செப்பும்
கிராணியிற் பாண்டில் கிளர் நீர்சுருங்கிற்
பிராணன் பிரியுமெனப் பேசு."

சரபேந்திரர் வைத்திய முறைகள்

வீக்கத்தில் மஞ்சள் நிறம் காணப்பட்டால் குணம் ஏற்படாது. மலச்சிக்கலோ அல்லது பச்சை நிறமான அதிசாரமோ ஏற்பட்டால் அசாத்தியம். பலவீனம், வாந்தி, மூர்ச்சை, அதிக நாளான பாண்டு ரோகம் சிகிச்சைக்கு வசப்படாது. நாவறட்சி, இரத்தக் குறைவினால் உடல் வெளுப்பு முதலியவைகலுடன் கூடிய ரோகியும் குணமடைவது சிரமம்.

பற்கள், நகம், கண் இவைகள் அதிகம் வெளுத்தாலும் எல்லவற்றையும் வெண்ணிறமாக பார்த்தாலும் அந்த ரோகம் அசாத்தியமாகும். அசாத்திய

ரோகத்தை முற்றிலும் குணப்படுத்த முடியவிட்டாலும் சிறிது குறிகுணங்களை குறைத்து ஆயுளையும் சில காலம் நீடிக்கச் செய்யலாம்.

கைகள் கால்கள் தலை முதலான இடங்களில் வீக்கம் ஏற்பட்டு இளைத்து கைகால்களும் இளைத்து வயிறு பெருத்துமுள்ள் பாண்டு ரோகியையும் ஆண்குறி, தொடையிடுக்கு ஆகிய இடங்களில் வீக்கம், அடிக்கடி மயக்கம், அதிசாரம், சுரம் ஆகியன கண்டு வரும் ரோகியையும் குணப்படுத்துவது அசாத்தியமாகும்.

மாதவ நிதானம்

பாண்டுவின் அசாத்திய இலட்சணங்கள்

1. நீடித்து தொடர்வதும் மிக்க முதிர்ந்து போனதுமான பாண்டு சிகிச்சைக்கு வசப்படாது.
2. அவயங்கள் வீங்கிப் போய் எல்லாப் பொருளும் மஞ்சளாக தோன்றினால் தீராது.
3. இறுகிய சொற்ப மலத்துடன் மஞ்சள் நீராகவும் கபத்துடன் கூடியதாகவும் அதிசாரம் உண்டானால் அசாத்தியம்.
4. அதிக தீத்தன்மை அடைந்து அவயங்கள் வெண்மையாகி வாந்தி மூர்ச்சை நாவறட்சி உண்டானால் அசாத்தியம்.
5. இரத்தம் கெட்டு உடல் முற்றும் வெளுத்தால் தீராது.
6. தேகத்தின் கை, கால், தலை வீக்கம் உடல்வற்றி இளைத்துப் போனால் குதம், ஆண்குறி, பீஜம் வீக்கம் இருந்தால் தீராது.
7. மிக்க இளைப்பு மயக்க நிலை காணப்பட்டால் தீராது.
8. அதிசாரம் சுரம் கொண்ட பாண்டு தீராது.

மருத்துவப் பரிகாரம்

பிணிக்கப்பட்ட வளி, அழல், ஐயம் என்னும் முக்குற்றத்தைத் தன்னிலைப் படுத்துதல் மருத்துவம் என வழங்கப்படும். பிணிக்கப்பட்ட முக்குற்றங்கள் ஐம்புலங்கள், ஏழு உடற்தாதுக்கள் ஆகியவைகளை தன்னிலைப்படுத்தும் தன்மையுடையவை மருந்தாகும்.

மருந்து அகமருந்தென்றும் புறமருந்தென்றும் இருபிரிவாகக் கொள்ளினும் முக்கியமாக தாவரப்பொருள், தாதுப்பொருள், சங்கமப் பொருள் என மூன்று வகையாக வகுத்தனர். இதனை தேரன் கூறிய பிரகாரம்

“கற்பங்க ளாதி கழறு மருந்து முறை
விற்பனங் களாக விளங்குவதற்கு- முற்பங்கு
மூலிக் கருப்பொருள் மூலப்பொருள் வகைகள்
வேலிக்கு நேரா குமே.”

சித்த மருத்துவ முறைப்படி நோய்க்கு மட்டும் மருத்துவமின்றி அதனை வராது தடுக்கவும் காயகற்பமாகவும் மருந்துகள் பயன்படும்

“உற்றா னளவும் பிணியளவுங் காலமுங்
கற்றான் கருதிச் செயல்.”

- திருக்குறள்

நோயினன் அடைந்த குற்ற வேறுபாடுகளின் மிகுதல் குறைதல் அளவையும் அதனால் நோயுற்றான் பெற்ற நோயின் கால அளவை அறிந்து சிந்தித்து தகுந்த மருத்துவம் புரிவது அவசியம்.

மருத்துவ வழிமுறை

கேடடைந்த முக்குற்றம் வாயுக்கள், இரத்தத்தாது இதனை சமப்படுத்தும் மருந்துகளாக இருக்க வேண்டும். நாம் கொடுக்கும் மருந்துகளானது இரஞ்சகப்பித்தத்தை சமப்படுத்தி இரத்தத்தாதுவை தன் இயல்பான வேலைகள் செய்வதாக மாற்ற வேண்டும்.

“விரேசனத்தால் வாதந் தாழும்
வமனத்தால் பித்தந் தாழும்
நசியஅஞ்சனத்தால் கபந் தாழும்.”

அதிகரித்த பித்தத்தை தன்னிலைப்படுத்த வாந்தி மருத்துவம் செய்தல் வேண்டும். பாண்டு நோயில் நோயாளி சோர்வாகவும், தளர்வுடனும் இருப்பதால் வாந்தி முறை மருத்துவமானது கொடுப்பதில்லை.

உணவு

நோய் தொடக்கத்தில் பசியைத்தூண்டக்கூடியதும், உடலின் குருதியை பெருக்கக்கூடியதுமான உணவும் எளிதில் செரிக்கக்கூடியதாகவே இருத்தல் வேண்டும்.

கீரை வகைகள்

கரிசாலை, பொன்னாங்காணி, அறுகீரை, சிறுகீரை, மணத்தக்காளி, தாளீக்கீரை.

காய்கறிகள்

கத்தரிப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, வாழைக்கச்சல், அவரைப் பிஞ்சு.

<u>பழங்கள்</u>

கொடிமுந்திரிகை, சாத்துக்குடி, ஆப்பிள், அத்திப்பழம், மாதுளைப் பழம், நெல்லி.

<u>கறிவகைகள்:</u> வெள்ளாட்டுக் கறி, காடை, கௌதாரி.

MODERN ASPECT

The commonest nutritional deficiency disorder present throughout the world is iron deficiency anaemia.

Body is formed by solids and fluids. The fluid part is more than two third of the whole body water forms most of the fluid part of the body.

Blood is a connective tissue in fluid form. It is considered as the fluid of life, because it carries oxygen from lungs to all parts of the body and carbon dioxide from all parts of body to the lungs.It is known as the fluid of growth because it carries nutritive substances from the digestive system and hormones from endocrine gland to all the tissues.The blood is also called the fluid of health because it protects the body against the diseases and gets rid of the waste products and unwanted substances by transporting them to the excretory organs like kidneys.

Blood contains iron in the form of haemoglobin and as cytochromes etc. Any form of iron deficiency cause anaemia.

PROPERTIES OF BLOOD

COLOUR:

- Blood is red in colour.
- Arterial blood is scarlet red because it contains more oxygen
- Venous blood is purple red because of more carbon dioxide

VOLUME:

Average volume of blood in

- 5 litre in a normal adults
- 450 ml in a new born babies (it increases during growth and reaches 5 litre at the time of puberty)
- 4.5 litre in females

SPECIFIC GRAVITY:

Total blood: 1.052 - 1.061

Blood cells: 1.092 - 1.101

Plasma: 1.022 - 1.026

VISCOSITY:

Blood is five times more viscous than water due to red blood cells and plasma proteins

COMPOSITION OF BLOOD:

Blood contains the blood cells which are called formed elements and the liquid portion known as plasma.

- Blood consists of a solid protein 45% and a fluid protein 55%
- Solid protein constitutes RBC,WBC and platelets
- Fluid portion is plasma

BLOOD CELLS:

Blood cells are of three types

- Red blood cells or erythrocytes
- White blood cells or leucocytes
- Platelets ot thrombocytes

FUNCTIONS OF BLOOD:

1. NUTRITIVE FUNCTION:

Nutritive substances like glucose, amino acid, lipids and vitamins derived from digested food are absorbed from gastrointestinal tract and carried by blood to different parts of the body for growth and production of energy.

2. RESPIRATORY FUNCTION:

Transport of respiratory gases is done by blood. It carries oxygen from alveoli of lungs to different tissues and carbon dioxide from tissues to alveoli.

3. EXCRETORY FUNCTION:

Waste products formed in the tissues during various metabolic activities are removed by blood and carried to the excretory organs like kidney, skin, liver, etc. for excretion.

4. TRANSPORT OF HORMONES AND ENZYMES:

Hormones which are secreted by ductless glands are released directly into the blood. The blood transports these hormones to their target organs/ tissues. Blood also transports enzyme.

5. REGULATION OF WATER BALANCE:

Water content of the blood is freely interchangeable with interstitial fluid. This helps in the regulation of water content of the body.

6. REGULATION OF ACID BASE BALANCE:

Plasma proteins and hemoglobin act as buffers and help in the regulation of acid -base balance.

7. REGULATION OF BODY TEMPERATURE:

Because of the high specific heat of blood, it is responsible for maintaining the thermoregulatory mechanism in the body, i.e. the balance between heat loss and heat gain in the body.

8. STORAGE FUNCTION:

Water and some important substances like proteins, glucose, sodium and potassium are constantly required by the tissues. Blood serves as a readymade source for these substances. And, these substances are taken from blood during the condition like starvation, fluid loss, electrolyte loss, etc.

9. DEFENSIVE MECHANISM:

Blood plays an important role in the defense of the body. The white blood cells are responsible for this function. Neutrophils and monocytes engulf the bacteria by phagocytosis. Lymphocytes are involved in development of immunity. Eosinophils are responsible for detoxification, disintegration and removal of foreign proteins.

RED BLOOD CELLS

Red blood cells are the non-nucleated formed elements in the blood. Red blood cells are also known as erythrocytes. The red colour of the red blood cells is due to the presence of colouring pigment called hemoglobin. RBCs plays a vital role in transport of respiratory gases.RBCs are larger in number compared to the other two cells namely white blood cells and platelets.

NORMAL VALUE

The RBCs count ranges between 4 and 5.5 millions/cu mm of blood

In adult males	-5 millions/cu mm
In adult females	-4.5 millions/cu mm

MORPHOLOGY

Normal Shape : Disc shaped and biconcave (Dumb-bell shaped).

Normal Size : 7.2μ (6.9 – 7.4μ) in diameter.

Thickness : Periphery-2.2μ (Thicker)

Centrally - 1 μ (Thinner)

Surface Area : 120sq.μ

Volume : 90 -95cu. μ

ERYTHROPOIESIS:

Erythropoiesis is the process of the origin, development and maturation of erythrocytes.

SITE OFERYTHROPOIESIS:

IN FETAL LIFE:

In fetal life, the erythropoiesis occurs in three stages:

1. **Mesoblasticstage**

During the first two months of intrauterine life, the RBCs are produced from mesenchyme of yolk sac.

2. **Hepaticstage**

From third months of intrauterine life, liver is the main organ that produces RBCs.Spleen and lymphoid organs are also involved in erythropoiesis.

3. **Myeloid stage**

During the last three months of intrauterine life, the RBCs are produced from red bone marrow and liver.

IN NEWBORN BABIES, CHILDREN AND ADULTS

1. Up to the age of 20 years:RBCs are produced from red bone marrow of all bones.
2. After the age of 20 years:RBCs are produced from membranous bones like vertebra, sternum, ribs, scapula,iliac bones and skull bones and from the ends of the long bones. After 20 years of the age, the shaft of the long bones becomes yellow bone marrow because of fat deposition and loose the erythropoietic function.

   In adults, liver and spleen may produce the blood cells if the bone marrow is destroyed or fibrosed. Colletively bone marrow is almost equal to liver in size and weight. It is also as active as liver.

PROCESS OF ERYTHROPOIESIS:

STEM CELLS:

The stem cells are the primitive cells in the bone marrow, which give rise to all the blood cells. Stem cells are defined as a cell which is capable of both self-renewal and differentiation.

Pluripotent haemopoietic stem cells (PHSC) are derived from stem cells. PHSC are defined cells that can give rise to cells of all groups of haemopoietic cells like myeloid cells and lymphoid cells.

In the early stages, the PHSC are not designates to form a particular type of blood cell, and it is also not possible to determine the blood cell to be developed from these cells , hence the name uncommitted PHSC.

In adults only a few number of these cells are present. Best source of the cells is the umbilical cord blood.

When the cells are designated to form a particular type of blood cells the uncommitted PHSCs are called committed PHSCs.

Committed PHSCs are of two types:

1. Lymphoid stem cells (LSC) - which gives rise to Lymphocytes and natural killer (NK) cells
2. Colony forming blastocytes- Which gives rise to myeloid cells. Myeloid cells are the blood cells other than lymphocytes. When grown in cultures these cells form colonies hence the name colony forming blastocytes.

The different units of colony forming cells are:

I. Colony forming unit – Erythrocytes (CFE-E). The Cells of this unit develop into erythrocytes.

II. Colony forming unit granulocytes –Monocytes (FU-GM). These cells give rise to granulocytes (Neutrophils, Basophils and Eosinophils and Monocytes)

III. Colony forming unit- Megakaryocytes (CFU-M). Platelets are formed from these cells

CHANGES DURING ERYTHROPOIESIS:

The Cells of CFU-E pass through different stages finally become matured RBCs. During these changes four important changes are noticed.

a) Reduction in size of the cells

b) Disappearance of nucleoli and nucleus

c) Appearance of haemoglobin

d) Changes in the staining properties of the protoplasm.

STAGES OF ERYTHROPOIESIS:

Various stages between CFU-E cells and matured RBCs are

1. Proerythroblast
2. Early normoblast
3. Intermediate normoblast
4. Late Normoblast
5. Reticulocyte
6. Mature Erythrocyte



Stages of erythropoiesis

FACTORS NECESSARY FOR ERYTHROPOIESIS:

- General factors
- Maturation factors
- Factors necessary for haemoglobin formation

General factors

General factors necessary for erythropoiesis are

- Erythropoietin
- Thyroxine
- Hemopoietic growth factor
- Vitamins-B, C, D and E

Maturation factors

- Vitamin B12(Cyanocobalamin)
- Intrinsic factor of castle
- Folic acid

Vitamin B12 (Cyanocobalamin)

Vitamin B12 is called extrinsic factor because it is obtained mostly from diet. Vitamin B12is stored mostly in the liver and in small quantity in muscle.When necessary, it is transported to the bone marrow to promote maturation of RBCs.

Intrinsic factor of castle

The extrinsic and intrinsic factors are together called haematinic principle.

Folic acid

It is also essential for maturation. It is required for the synthesis of DNA. In the absence of folic acid the synthesis of DNA decreases causing failure of maturation.This leads to anaemia.

Factors necessary for Haemoglobin formation:

Various materials are essential for the formation of haemoglobin in the RBCs. Such factors are,

1. First class protein and aminoacids
2. Iron: It is necessary for the formation of heme part of the haemoglobin
3. Copper: It is necessary for the absorption of iron from the gastrointestinal tract.
4. Cobalt and nickel: It is essential for the utilization of iron during haemoglobin formation.
5. Vitamins: Vitamin C, Riboflavin, nicotinic acid and pyridoxine is also essential for the formation of haemoglobin.

LIFE SPAN AND FATE OF RBC:-

Average life span of red blood cells is about 120 days.The senile red blood cells are destroyed in reticulo-endothelial system.

When the cells become older the cell membrane becomes more and more fragile. So these cells are destroyed while trying to squeeze through the capillaries. The destruction occurs mostly in the capillaries of the spleen because the splenic capillaries have a thin lumen. So the spleen is usually called “Grave yard” of red blood cells.

Daily 10 % of RBCs, which are senile, are destroyed in normal young healthy adults. It causes release of about 0.6g% of haemoglobin into plasma.



Figure 19.05 Tortora - PAP 12/e

HAEMOGLOBIN

Hemoglobin is the iron containing coloring matter of red blood cell. It is a chromoprotein forming 95% of dry weight of RBC and 30% to 34% of wet weight. Function of hemoglobin is to carry the respiratory gases, oxygen and carbon dioxide. It acts as a buffer. Molecular weight of hemoglobin is 68,000.

NORMAL HEMOGLOBIN CONTENT

Average hemoglobin content in blood is 14 to 16 g/dL. However, the value varies depending upon sssthe age and sex of the individual.

AGE

- At birth Hb level : 25g/dL
- After 3rd month : 20g/dL
- After 1 year : 17g/dL
- From puberty onwards : 14 to 16g/dL
- At the time of birth, hemoglobin content is very high because of increased number of RBCs

SEX

In adult males : 15g/dL

In adult females : 14.5 g/dL

FUNCTIONS OF HEMOGLOBIN

- Transport of respiratory gases
  - Oxygen from the lungs to tissues
  - Carbon dioxide from tissues to lungs
- Buffer action

  Hemoglobin acts as a buffer and plays an important role in acid- base balance

STRUCTURE OF HAEMOGLOBIN

Haemoglobin is a conjugated protein. It consists of a protein combined with an iron containing pigment in heme. The protein part is globin and the iron containing pigment is heme.

- Heme also forms a part of structure of myoglobin (oxygen binding pigment in muscles)
- Neuroglobin(Oxygen binding pigment in brain)

Iron:

Normally it is present in ferrous form Fe++. It is in unstable or loose form.

Porphyrin:

The pigment part is called porphyrin. It is formed by four pyrole ring called I, II, III, IV. The Pyrole rings are attached to one another by methane (CH_4) bridge
The iron is attached to

-N of the each pyrole ring and

-N of the globin molecule

Globin:

This contains four polypeptide chains

- α chains-2
- β chains -2

TYPES OF HAEMOGLOBIN

Haemoglobin is of two types

1. Adult haemoglobin- HbA
2. Fetal haemoglobin- HbF

There are structural differences between the two types of haemoglobin. In adult haemoglobin, the globin contains two α chains and two β chains. In fetal haemoglobin, there are two α chains and two γ chains instead of β chains.

SYNTHESIS OF HEMOGLOBIN

Synthesis of hemoglobin actually starts in proerythroblastic stage. However, hemoglobin appears in the intermediate normoblastic stage only. Production of hemoglobin is continued until the stage of reticulocyte.

The heme protein of hemoglobin is synthesized in mitochondria. And the protein part, globin is synthesized in ribosomes.

SYNTHESIS OF HEME:



Heme is synthesized from succinyl-Co A and the glycine. The sequence of events in synthesis of hemoglobin:

1. First step in heme systhesis takes place in the mitochondrian. Two molecules of succinyl-Co A combines with two molecules of glycine and condense to form α aminolevulinic acid (ALA) by ALA synthase.
2. ALA is transported to the cytoplasm. Two molecules of ALA combine to form porphobilinogenin the presence of ALA dehydratase.
3. Porphobilinogen converted into urophobilinogen - I by urophobilinogen - I synthase
4. Uroporphobilinogen - I is converted into uroporphobilinogen - III byporphobilinogen - III cosynthase.
5. From uroporphobilinogen - III, a ring structure called coporphobilinogen - III is formed by uroporphobilinogen decarboxylase.
6. Coprophobilinogen - III is transported back to the mitochondrion, where it is oxidized to form protoporphyrinogen - IX by coproporphyrinogen oxidase.

7. Protoporphyrinogen - IX is converted into protoporphyrin - IX by protoporphyrinogen oxidase.
8. Protoporphyrin - IX combines with iron to formheme in the presence of ferrochelatase.

FORMATION OF GLOBIN

Polypeptide chains of globin are produced in the ribosomes. There are four types of polypeptide chains namely, alpha, beta, gamma and delta chains. Each of these chains differs from others by the amino acid sequence. Each globin molecule is formed by the combination of 2 pairs of chains and each chain is made of 141 to 146 amino acids. Adult hemoglobin contains two alpha chains and two beta chains. Fetal hemoglobin contains two alpha chains and two gamma chains.

CONFIGURATION

Each polypeptide chain combines with one heme molecule. Thus, after the complete configuration, each hemoglobin molecule contains 4 polypeptide chains and 4 heme molecules.

SUBSTANCES NECESSARY FOR HEMOGLOBIN SYNTHESIS

Various materials are essential for the formation of hemoglobin in the RBC.

DESTRUCTION OF HEMOGLOBIN

After the lifespan of 120 days, the RBC is destroyed in the reticuloendothelial system, particularly in spleen and the hemoglobin is released into plasma. Soon, the hemoglobin is degraded in the reticuloendothelial cells and split into globin and heme.

Globin is utilized for the resynthesis of hemoglobin. Heme is degraded into iron and porphyrin. Iron is stored in the body as ferritin and hemosiderin, which are reutilized into a green pigment called biliverdin. In human being, most of the biliverdin is converted into a yellow pigment called bilirubin. Bilirubin and biliverdin are together called bile pigments.

BREAKDOWN OF HEMOGLOBIN



NORMAL VALUES OF HAEMOGLOBIN OF DIFFERENT AGE GROUP

AGE GROUP	MEAN(G/dl)	RANGE(G/dl)
Cord blood	17.1	13.7-20.5
7 days	18.8	14.6-23.0
20 days	15.9	11.3-20.5
45 days	12.7	9.5-15.9
75 days	11.4	9.6-13.2
120 days	11.9	9.9-13.9
1 year	12.2	10-13.0
5 year	12.5	12-13
10 year	13.5	13-14
Older	15	14-15

PACKED CELL VOLUME AND BLOOD INDICES:

Packed cell volume (PCV) is the haematocrit value expressed as the percentage of cellular elements with that of whole blood.

BLOOD INDICES:

Blood indices are specifically meant for erythrocytes. Blood indices have got diagnostic value in determining the type of anaemia.

DIFFERENT BLOOD INDICES:

Following are the different blood indices

1. Mean Corpuscular Volume (MCV)

Mean Corpuscular Volume is the average volume of single red blood cells and it is expressed in cubic microns(cu.μ)

$$\textbf{MCV} = \frac{\textbf{PCV in 1000ml or 100ml} \times \textbf{10}}{\textbf{RBC in millions per cu.mm}}$$

2. Mean Corpuscular Haemoglobin (MCH)

Mean Corpuscular Haemoglobin is the quantity or amount of haemoglobin present in one red blood cell. It is expressed in micrograms or pictograms(pg)

$$\textbf{MCH} = \frac{\textbf{Haemoglobin in gms per 1000ml of blood} \times \textbf{100} \times \textbf{10}}{\textbf{RBC count in millions per cu.mm}}$$

3. Mean Corpuscular Haemoglobin Concentration (MCHC)

It is the amount of haemoglobin expressed in relation to volume of one blood cell. So the unit of expression is percentage.

$$\textbf{MCHC} = \frac{\textbf{Haemoglobin in grams per 100ml of blood} \times \textbf{10}}{\textbf{PCV in 100 ml of blood}}$$

4. Colour Index:

This is the ratio between the percentage of the haemoglobin and the percentage of red blood cells in the blood.

$$\textbf{CI} = \frac{\textbf{Haemoglobin in \%}}{\textbf{RBC in \%}}$$

All the above mentioned blood indices are reduced in iron deficiency anaemia.

NORMAL VALUES:

Packed Cell Volume (PCV):

3 month – 10 years	-36.0±5.0%
11 – 15 years	-39.0 ± 5.0%

Mean Corpuscular Volume (MCV)

3 months -10 years	-80 cu.μ
11-15 years	-82 cu.μ

Mean Corpuscular Haemoglobin (MCH)

3months – 10years -27 picograms

11- 15 years -28 picograms

Mean Corpuscular Haemoglobin Concentration (MCHC)

3months to 10 years -34g/dl

11- 15 years -34g/dl

Reticulocytes:

6 months – 6 years -1.0%

7- 12 years -1.0%

IRON :

